# கோபாலன் இருபது.

( ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த கோபால விம்ஸதி )

தமிழாக்கம் : பொய்கையடியான்.



ஸ்ரீஜயந்தியில் தோன்றி, ப்ருந்தாவனத்தில் சஞ்சரிக்கின்ற,
ஆயர்குலப்பெண்களின் மனதினைக் கவர்ந்த நாதனாகவும் ;
வைஜயந்தி எனும் மாலையை ஆபரணமாக உடையதுமான ,
நேயர்களுக்குப் பிரியமான ஓர் தேஜஸை வணங்குகிறேன் . 1.

பெயரையே அடையாளமாக்கி மகிழ்ச்சியுடன் பார்ப்பவனும் ,
சிவந்த தாமரைபோன்றவாயில் வெண்சங்கையுடையவனும் ;
ஆயர்கள் சூழஇருக்கின்றவனும், பலநிற முக்கோணவடிவில் ,
சிறந்த தாமரைமீது வீற்றிருக்கும் கண்ணனை வணங்குகிறேன் . 2.

வேதத்தின் வாசனையும், அழுவதால் துடிக்கின்ற உதடுகளும் ,
கண்ணீரால் கலங்கிய கண்களும், உடனே ஒருபுன்முறுவலுடன் ;
யாதவ வடிவுடையவனும், தாயாக வந்த பூதனையின் உயிரை ,
உண்டவனுமான கண்ணனை பரம புருஷனாக அறிகின்றேன் . 3.

அசைகின்ற ஆபரணங்களும், தூக்கிமடித்த ஒருபாதத்தையும் ,
அசையாத மற்றொரு பாதமும், கடைவதால் உண்டாகிடும் ;
இசையுடன் கூடிய தாளத்தையுடைய ரக்ஷகன் கண்ணனின் ,
திசையெங்குமாடிய நடனம் என்கண்முன்னே தோன்றட்டும் . 4.
இனிப்பான வெண்ணையைத் திருட குடத்தில் விட்டகையும் ,
பிணைக்க கோபத்துடன் கயிறெடுத்த யசோதையைப் பார்த்து ;
குனிந்தபார்வையுடன் நகர்ந்து ஒருநிலையில் நிற்காதவனும் ,
துணைவனுமான கண்ணன் நம்மெல்லோரையும் காக்கட்டும் 5.
மங்கையரின் சிறந்த கண்ணழகிற்கு உரியவனும், வடமதுரை ,
பண்ண புண்ணியவடிவும் வேறொன்று நாடாதார்க்கினியவனும் ;
நங்கை தேவகியின் பாலைப்பருகுவதும், அழகியஅக்குழந்தைக் ,
கண்ணனை அந்தப் பரம்பொருளை அடியேன் துதிக்கின்றேன் . 6.
பெரிய உரலைத்தன்னுடன் இழுத்துவருபவனாய், அச்சத்தால் ,
திருப்பிய கழுத்துடன், புன்சிரிப்பால் மலர்ந்த தளிர்போன்ற ;
சிறிய உதட்டையும், இருவரின் மரப்பிறவியை ஒழித்தவனும் ,
சிறுவனுமான அந்தக்கண்ணனை தினமும் தியானிக்கிறேன் . 7.
வேதாந்தங்களால் இன்றும் தேடப்படுபவனும் இருமரங்களால் ,
கண்முன் நடத்தப்பட்ட லீலையும், யமுனைநதி தன்முன்னே ;
யதார்த்தமாகக்கண்ட இளம்வயதுசெயல்களையுடைய அந்தக் ,
கண்ணனை, வாலிபனை எங்கும், எப்போதும் காண்கின்றேன் . 8.
பரமபதம் செல்லும்வழியாக, பிருந்தாவனத்தின் செல்வனாக,
நீருண்டமேகம்போன்று, சிவந்த தன்உதடுகளில் ஆசையுடன் ;
பரவயிருக்கும் புல்லாங்குழல் கொண்டு கீதம் இசைப்பவனாக,
காருண்யத்துடன் மனிதனாக அவதரித்தவனை வணங்குகிறேன் . 9.

இருகண்களுக்கு விருந்தாவதும், நீங்காத யௌவனத்துடன் ,
மயில்தோகையுடன் சண்டையுடுகின்ற கேசங்களையுடைய ;
பருவவிளையாட்டுகளால் உடலை முறுக்கேற வைக்கவல்ல ,
ஒயிலான அந்த தேஜஸ் என்றும் என்மனதில் தோன்றட்டும் . 10.
பின்தொடர்ந்து வருகின்ற, நம்மனதினைக் கவர்கின்றதுமான ,
குழலுடையவையும், கோபிகைகளை மோகிக்கச்செய்பவையும்
புன்சிரிப்பால் குளிர்ச்சியாக இருப்பவையும், கருணையாகிற ,
புழலுக்குத் தாமரைபோன்ற கண்கள் என்னை ரக்ஷிக்கட்டும் 11.
சுந்திர உதட்டினில் வைக்கப்பட்ட குழலைப் பற்றியவையும் ,
வண்ணங்களைவாரி வழங்கும் மயிற்இறகுகளைப் பற்றியும் ;
இந்திர நீலக்கல்லின் துண்டுபோன்ற நீலநிறம் பற்றியதுமான ,
எண்ணங்கள் என்கடைசீகாலத்திலும் தோன்றவேண்டுகிறேன் . 12.
இலக்குமியென்ற உத்தம ஸ்திரீக்கு சொந்தமாக விளங்கும் ,
திருமார்புடைய யுவனான கண்ணன் தன்னுடைய அன்பிற்கு ;
இலக்கான, பிருந்தாவன பெண்களின் ஆசைக்கு பாத்திரமான ,
ஒருவருணனைக்கப்பாற்பட்ட சௌந்தர்யத்தைப் பார்க்கிறேன் . 13.
ஆபரணமாக அழகிய மயிற் தோகையை தலையில் உடைய ,
மன்மதனால் துன்புற்ற கோபஸ்திரீகளின் முகத்தாமரைக்கு ;
ஆதவனுமாக விளங்குகின்ற இந்தவாலிபக் கண்ணனானவன் ,
என்இதயத்தில் எந்த சிற்பியால் செதுக்கப்பட்டு இருக்கிறான் ? 14.
அஞ்சனம் போன்று போற்றதகு ஒளியுடையதாய் இருக்கின்ற ,
வளையல்கள் இடைப்பெண்கள் கைகளில் சப்திக்கசெயகின்ற ;
அஞ்சனம் போன்று நீண்ட கருங்குழல்களையுடையதாயுள்ள ,
களைபொருந்திய ஒளிவடிவத்திற்குத் தலைவணங்குகின்றேன் . 15.

நில்லாமல் தளர்ந்த இடைப்பெண்களின் வளையல் ஒலியால் ,
லளிதம் எனப்படும் நடனமும், குளிர்ந்த கையால் தாளமும் ;
எல்லாவுலகையும் காக்க இடையன் வேடமிட்ட பெருமானின் ,
பவழம்போன்ற உதட்டில் உள்ள புல்லாங்குழல் சிறக்கின்றது 16.

வெள்ளைநிறத்தில் இருக்கும் லாங்கலியென்ற காதணியும் ,
குன்றுமணிமாலை மார்பிலும், பந்துஜீவன்மலரைக்கையிலும் ;
கொள்ளைகொள்ளும் கேசத்தில் மயிற்பீலி ஆபரணமாகவும் ,
அன்று இளம் பெண்களின் மனம்கவர்தவன் விளங்குகிறான் . 17.

தளிர்போன்ற வலதுகையில் பாக்யம்செய்த அழகியகழியும் ,
சிலிப்பிலிருக்கும் ஒருகோபஸ்திரீயின் தோளில் மறுகையும் ;
ஒளிர்கின்ற ஒட்டியாணத்தில் செருகிய புல்லாங்குழலுடைய ,
களிப்பில் கோபகன்னிகைகளின் காதலன் விளங்கு கின்றான் . 18.

மண்டியிட்ட இடதுகாலும், மடித்துவலதுகாலையூன்றிக்கொண்டு ,
பின்புறத்திலிருந்து இறுகத்தழுவப் பெற்றகாதலியை பார்பவனும் ;
சுண்டியிழுக்கப் பீச்சாங்குழலில் கையும், நனைந்த வஸ்திரமுடன் ,
இன்னுயிர் போன்ற கோபிகைகளின் காதலன் நம்மைகாக்கட்டும் .19.

ஆதித்தன் மகளான யமுனைக் கரையில் ஆடைகளையொளித்து ,
குருந்தமரத்தின் ஒருகிளையில் புன்முறுவலுடன் வீற்றிருக்கும் ;
நாதியற்ற பெண்கள் வெட்கத்துடன் ஆடைகளைவேண்டியபோது ,
முகந்தன், அவர்களை இருகரமுயர்த்தி வேண்டிடச் சொன்னான். 20.

வேறொன்றில் செல்லாத மனதையுடைய வேங்கடகவியினால் ,
இயற்றபட்ட இத்தோத்திரத்தைப் படிப்பவர்கள் தெய்வீகமானதும் ;
வேங்குழலில் என்றும் இனியரஸானுபவம் புரிகின்றவனுமான ,
வயதுபெண்களுக்கு ஒப்பற்றதான தெய்வத்தை தியானிக்கிறேன் 21.